# Meeting of Focal Points of India, France and UAE

---

**இந்தியா, பிரான்ஸ் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் நாடுகளுக்கிடையேயான முத்தரப்பு பேச்சுவார்த்தை**

ஜூலை 28, 2022

இந்தியா, பிரான்ஸ் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் நாடுகளுக்கிடையே இன்று முத்தரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்தியத் தரப்பில் இணைச் செயலாளர் (ஐரோப்பா மேற்கு) திரு சந்தீப் சக்ரவர்த்தியும், இணைச் செயலாளர் (வளைகுடா) திரு. விபுல் அவர்களும் தலைமை வகித்தனர். பிரான்ஸ் தரப்பில் இயக்குநர் (ஆசியா மற்றும் ஓசியானியா) திரு. பெர்ட்ரண்ட் லோர்த்தோலரி மற்றும் பிரெஞ்சு வெளியுறவு அமைச்சகத்தின் துணை இயக்குநர் (மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்கா) திரு. இமானுவேல் சுகெட் ஆகியோர் தலைமை வகித்தனர். அமீரகத் தரப்புக்கு ஐக்கிய அரபு அமீரக வெளியுறவு அமைச்சகத்தின் பொருளாதார மற்றும் வர்த்தக விவகாரத் துறையின் துணை இயக்குநர்.திரு. அஹ்மத் புர்ஹைமா தலைமை வகித்தார்.

2.பேச்சுவார்த்தையில் இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் உள்ள பிரச்சனைகள் குறித்த தங்களுடைய கருத்துகளை மூன்று நாடுகளும் பகிர்ந்துகொண்டதுடன், கடல்சார் பாதுகாப்பு, மனிதாபிமான உதவிகள் மற்றும் பேரிடர் நிவாரணம் (HADR), கடல் பொருளாதாரம், பிராந்திய இணைப்பு, பண்முக ஒத்துழைப்பு, எரிசக்தி மற்றும் உணவுப் பாதுகாப்பு, புதிய கண்டுபிடிப்புகள், புதிய நிறுவனங்கள் தடையற்ற விநியோகம், கலாச்சாரம் மற்றும் மக்களுக்கிடையேயான ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் முத்தரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்தும் அவர்கள் ஆலோசித்தனர்.

**புது டெல்லி**
**ஜூலை 28, 2022**

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA’s website and may be referred to as the official press release.